Updated

# QB365 Question Bank Software Study Material

## அன்றாட வாழ்வில் வேதியியல் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 12ம் வகுப்பு
## வேதியியல்

தேர்வு நாள் : 08-08-24

கால அளவு : 01:00 மணி நேரம்

பதிவு எண் : ☐☐☐☐☐☐

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

50 x 1 = 50

1) பின்வருவனவற்றுள் எது வலிநிவாரணி?

(அ) ஸ்ட்ரெப்டோமைசின் (ஆ) குளோரோமைசிடின் **(இ) ஆஸ்பிரின்** (ஈ) பெனிசிலின்

2) புரைதடுப்பான்கள் மற்றும் கிருமிநாசினிகள் நுண்ணுயிரிகளைக் கொல்கின்றன அல்லது அவற்றின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றன. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

**(அ) நீர்த்த போரிக் அமிலம் மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு ஆகியன வலிமை மிகுந்த புரைதடுப்பான்களாகும்.**

(ஆ) கிருமிநாசினிகள் உயிருள்ள செல்களை பாதிக்கின்றன

(இ) பீனாலின் 0.2% கரைசல் ஒரு புரைதடுப்பான், ஆனால் 1% கரைசல் ஒரு கிருமிநாசினி.

(ஈ) குளோரின் மற்றும் அயோடின் ஆகியவை வலிமை மிக்க கிருமிநாசினிகளாக பயன்படுகின்றன.





3) உணர்வேற்பி மையத்துடன் பிணைந்து அதன் இயல்பான செயல்பாட்டைத் தடுக்கும் மருந்துகள் _________ என்றழைக்கப்படுகின்றன.

**(அ) எதிர்வினையூக்கி** (ஆ) முதன்மை இயக்கி (இ) நொதிகள் (ஈ) மூலக்கூறு இலக்குகள்

4) ஆஸ்பிரின் என்பது _______.

**(அ) அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்** (ஆ) பென்சாயில் சாலிசிலிக் அமிலம் (இ) குளோரோபென்சாயிக் அமிலம் (ஈ) ஆந்த்ரனிலிக் அமிலம்

5) பின்வருவனவற்றுள் எந்த அமைப் பு நைலான் 6,6 பலபடியை குறிப்பிடுகிறது?

(அ) 
(ஆ) 
(இ) 
**(ஈ)** 

6) இயற்கை இரப்பர் கொண்டிருப்பது _______.

(அ) ஒன்றுவிட்ட சிஸ் மற்றும் டிரான்ஸ் அமைப்பு (ஆ) தன்னிச்சயான சிஸ் மற்றும் டிரான்ஸ் அமைப்பு **(இ) அனைத்தும் சிஸ் அமைப்பு** (ஈ) அனைத்தும் டிரான்ஸ் அமைப்பு

7) நைலான் என்பது எதற்கு எடுத்துக்காட்டு?

**(அ) பாலிஅமைடு** (ஆ) பாலித்தீன் (இ) பாலி எஸ்டர் (ஈ) பாலிசாக்கரைடு

8) டெரிலீன் என்பது எதற்கு எடுத்துக்காட்டு ?

(அ) பாலிஅமைடு (ஆ) பாலித்தீன் **(இ) பாலி எஸ்டர்** (ஈ) பாலிசாக்கரைடு

9) பின்வருவனவற்றுள் எது நியோப்ரீனின் ஒற்றைப்படி மூலக்கூறு?

**(அ)** $CH_2-\underset{Cl}{\underset{|}{C}}-CH=CH_2$ (ஆ) $CH_2=CH-C\equiv CH$ (இ) $CH_2=CH-CH=CH_2$ (ஈ) $CH_2=\underset{CH_3}{\underset{|}{C}}-CH=CH_2$

10) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று மக்கும்பலபடி?

(அ) HDPE (ஆ) PVC (இ) நைலான் 6 **(ஈ) PHBV**

11) பொதுவாக, ஒட்டா சமையல் பாத்திரங்களின் மேற்பரப்பில் பலபடி பூசப்பட்டுள்ளது. அந்த பலபடியின் ஒற்றைப்படி மூலக்கூறு ______.

(அ) ஈத்தேன் (ஆ) புரப்-2-ஈன்நைட்ரைல் (இ) குளோரோஈத்தீன் **(ஈ) 1,1,2,2-டெட்ராஃபுளூரோஈத்தேன்**

12) **கூற்று:** இயற்கை இரப்பரின் ஒற்றைப்படி மூலக்கூறு 2-மெத்தில்-1,3-பியுட்டாடையீன்
**காரணம்:** இயற்கை இரப்பரானது எதிரயனி சேர்ப்பு பலபடியாக்கலின் மூலம் உருவாகிறது..

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம், கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம், கூற்றுக்கான சரியான விளக்கமல்ல .

**(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு** (ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

13) பின்வருவனவற்றுள் எது பல்லின பலபடி?

(அ) ஆர்லான் (ஆ) PVC (இ) டெஃப்லான் **(ஈ) PHBV**

14) போர்வைகள் (செயற்கை கம்பளி) செய்ய பயன்படும் பலபடி ______.

(அ) பாலிஸ்டைரீன் **(ஆ) PAN** (இ) பாலிஎஸ்டர் (ஈ) பாலித்தீன்

15) பின்வரும் கூற்றுகளில் குறுக்க-இணைப்பு பலபடிகள் தொடர்பான தவறான கூற்று எது?

(அ) பேக்கலைட் மற்றும் மேலமைன் ஆகியன எடுத்துக்காட்டுகளாகும்

(ஆ) அவை, இரண்டு அல்லது மூன்று வினைசெயல் தொகுதிகளைக் கொண்ட ஒற்றைப்படி மூலக்கூறுகளிலிருந்து உருவாகின்றன.

(இ) அவை, பல்வேறு நேர்க்கோட்டு பலபடி சங்கிலிகளுக்கிடையே சகப்பிணைப்புகளை கொண்டுள்ளன

**(ஈ) அவை , அவற்றின் பலபடிசங்கிலியில் வலிமையான சகப்பிணைப்புகளை கொண்டுள்ளன.**

16) டெட்டால் என்பது எதன் கலவை ?

(அ) குளோரோசைலினால் மற்றும் பைதயோனால் **(ஆ) குளோரோசைலினால் மற்றும் α-டெர்பினால்**

(இ) பீனால் மற்றும் அயோடின் (ஈ) டெர்பினால் மற்றும் பைதயோனால்

17) டையசோனியம் உப்பு இணைப்பு எதனுடன் ஈடுபடுகிறது?

(அ) ஆல்கஹால் (ஆ) அரோமேட்டிக் அமீன் (இ) எல்லா அமிலங்களும் **(ஈ) பீனால்**

18) பின்வருவவற்றுள் எது மயக்கமூட்டி அல்ல?

**(அ) N2O** (ஆ) CHCl3 (இ) ஈதர் (ஈ) நோவால்ஜின்

19) சுர நிவாரணியாகவும்,வலி நிவாரணியாகவும் செயல்படும் பொருள் ________

(அ) ஃபினாசிடின் (ஆ) சல் ஃபா மருந்து (இ) பாராசிட்டமால் **(ஈ) ஆஸ்பிரின்**

20) ராபிஸ் நோயை குணப்படுத்தும் மருந்து ____________

(அ) பாக்ட்டீரியா எதிரிகள் (ஆ) வைரஸ் எதிரிகள் (இ) பூஞ்சை எதிரிகள் **(ஈ) நுண்ணுயிர் எதிரிகள்**

21) நமது தோலுக்கும் வளிமண்டலத்துக்குமிடையே ஈரத் தடுப்பானாக செயல்படுவது __________

(அ) உணவு பாதுகாப்பான் **(ஆ) பால்மமாக்கி** (இ) எதிர் திடமாக்கி (ஈ) ஈரமாக்கி

22) பினாசிடின் என்பது ஒரு __________

(அ) வலி நிவாரணி **(ஆ) சுரநிவாரணி** (இ) புரைத்தடுப்பான் (ஈ) எதிர்புரோட்டோசோவா

23) பின்வருவனவற்றுள் பொது உணர்வையும் பாதிக்கும் காரணி எது ?

(அ) பென்சிலின் (ஆ) பினசிடின் (இ) ஆஸ்பிரின் **(ஈ) டைஎத்திலீன் ஈதர்**

24) வலி நிவாரணிகளின் வேறு பெயர் __________

(அ) தூக்கமூட்டிகள் **(ஆ) வலி நீக்கிகள்** (இ) எதிர் புரோட்டோசோவாக்கள் (ஈ) பாராசிட்டமால்

25) பின்வருவனவற்றுள் கிருமி நாசினியாகப் பயன்படுவது யாது ?

(அ) 0.2% பீனால் கரைசல் **(ஆ) 1% பீனால் கரைசல்** (இ) 0.1% பீனால் கரைசல்

(ஈ) 0.1% அயோடோபார்ம் கரைசல்

26) பென்சிலின் மூலக்கூறுகள் வைப்பது எது?

(அ) $C_6H_5NO_2$ **(ஆ) $C_9H_11N_2O_4S$-R** (இ) $C_6H_5SO_3H$ (ஈ) $C_9H_11N_4O_2$

27) மெட்டா இடத்தில் நிறம் உயர்த்தி காணப்பட்டால் _______ .

(அ) நிறத்தை அதிகரிக்கும் **(ஆ) நிறத்தை பாதிப்பதில்லை** (இ) நிறத்தை குறைக்கும் (ஈ) எதுவுமில்லை

28) பழரசம் மற்றும் பழசாறு ஆகியவற்றை பாதுகாக்க பயன்படுவது எது?

**(அ) சோடியம் பென்சோயேட்** (ஆ) எத்தில் அசிட்டேட் (இ) சோடியம் பீனாக்சைடு (ஈ) கால்சியம் ஆக்சலேட்

29) _________ மதிப்பு அதிகமெனில், மருந்தானது பாதுகாப்பானதாகும்.

(அ) PPM **(ஆ) மருந்தாக்க எண்** (இ) TFM மதிப்பு (ஈ) மூலக்கூறு நிறை

30) இது புரதத் தொகுப்பின் துவக்கத்தை தடுக்கிறது.

(அ) எரித்ரோமைசின் **(ஆ) ஸ்ட்ரெப்டோமைசின்** (இ) பெனிசிலின் (ஈ) அமாக்சிலின்

31) மற்ற வகைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த வகைப்பாடானது அதிக சிறப்பு வாய்ந்தது

(அ) வேதி அடிப்படையில் (ஆ) இலக்கு அடிப்படையில் (இ) மருந்தியல் விளைவு அடிப்படையில்

**(ஈ) செயல்பாட்டு தளம் அடிப்படையில்**

32) வினைப்பொருளின் வடிவமைப்பை ஒத்த மருந்து மூலக்கூறானது உட் செலுத்தப்படும் போது அது நொதியுடன் பிணைந்து அதன் செயல்பாட்டை ____________.

(அ) துவக்குகிறது **(ஆ) முடக்குகிறது** (இ) தொடரச் செய்கிறது (ஈ) ஏதுமில்லை

33) சில நொதிகளில், தடுப்பான் மூலக்கூறுகள், கிளர்வு மையங்களில் பிணையாமல் வேறு சில மையங்களில் சென்று பிணைகின்றன. இம்மையங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

(அ) பிறமைய தடுப்பான்கள் (ஆ) கிளர்வு மையங்கள் (இ) செயல்பாட்டு இடங்கள் **(ஈ) பிறமையாங்கள்**

34) நரம்பு மண்டலத்தை தாக்கும் மருந்துகள் ____________

(அ) வலிநிவாரணிகள் **(ஆ) மன அமைதிப்படுத்திகள்** (இ) காயச்சல் மருந்துகள் (ஈ) ஒப்பியாய்டுகள்

35) ஒபியாய்டுகள் __________ வலி நிவாரணிகளாகும்

(அ) போதை தராத **(ஆ) போதை தரும்** (இ) சாலிசிலேட் (ஈ) ஏதுமில்லை

36) இது ஓர் அமைடு பிணைந்த மரப்பு மருந்து ஆகும்

**(அ) புரோகைன்** (ஆ) லிடோகைன் (இ) ப்ரொபோ∴பால (ஈ) ஐசோ∴ப்ளுரேன்

37) இது ஒரு தொகுப்பு ஈஸ்ட்ரோஜன்.

(அ) மென்ஸ்ட்ரனால் (ஆ) எத்தினைல் ஈஸ்ட்ராடையால் **(இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்**

(ஈ) நாரீதிண்ட்ரோன்

38) ஒரு சோப் மூலக்கூறில் முனைவற்ற பகுதியானது _____________

(அ) நீர் விரும்பும் பகுதியாகும் **(ஆ) நீர் பெறுக்கும் பகுதியாகும்** (இ) நடுநிலை பகுதியாகும் (ஈ) ஏதுமில்லை.

39) குறுக்குப் பிணைப்பு பலபடிக்கு ஓர் எடுத்துக்காட்டு _________

(அ) LDPE (ஆ) HDPE (இ) PVC **(ஈ) பேக்லைட்**

40) எத்திலின் கிளைக்கால் மற்றும் டைமெத்தில் டெர்ரி∴ப்தாலேட்டின் பலபடியானது ____________

(அ) டெர்ரீன் (ஆ) பெரிலின் (இ) டெக்ரான் **(ஈ) மேற்கண்ட அனைத்தும்**

41) அக்ரியோ நைட்ரைல் மற்றும் பியூட்டா -1,3 - டையீனின் பல்லினபலபடி (Ca polyner) _________

(அ) பியூனா S **(ஆ) பியூனா - N** (இ) இயற்கை இரப்பர் (ஈ) நியோப்ரீன்

42) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று மக்கும் பலபடி?

**(அ) PGA** (ஆ) PVC (இ) நைலான் - 6 (ஈ) HDPE

43) இது ஒரு பாலி அமைடு ஆகும்

(அ) டெரிலீன் (ஆ) நைலான்-6,6 (இ) நைலான் -2,6 **(ஈ) (அ) மற்றும் இ) இரண்டும்**

44) இது மலேரியாவை குணப்படுத்துகிறது.

(அ) குயினின் (ஆ) ஆஸ்பிரின் (இ) அளால்ஜின் **(ஈ) ஈக்குவானில்**

45) உணர்வை இழக்க செய்யும் மருந்துகள் _____எனப்படும் ?

**(அ) மயக்க மருந்துகள்** (ஆ) எதிர் உயிரிகள் (இ) சுர நிவாரணிகள் (ஈ) புரை தடுப்பான்

46) இவ்வாறாக செயல்பட சோப்புடன் பை தயோனல், கூட்டுப் பொருளாக சேர்க்கப்படுகிறது.

(அ) உலர்த்தி (ஆ) தாங்கல் காரணி **(இ) புரைத்தடுப்பான்** (ஈ) மென்மையாக்கி

47) "Morning after Pil" ஆக பயன்படுத்தப்படுவது எது?

(அ) நாரீத்தின்ட்ரோன் (ஆ) எத்தினைல் எஸ்ட்ராடையால் **(இ) மி∴ப்பிரிஸ்டோன்** (ஈ) பைதயோனல்

48) சாக்கரின் ஒரு செயற்கை இனிப்புச்சுவையூட்டியாகும், இது ______ லிருந்து தயாரிக்கப்படுகிறது.

(அ) செல்லுலோஸ் **(ஆ) டொலுயீன்** (இ) வளையஹெக்ஸீன் (ஈ) ஸ்டார்ச்

49) தூக்கத்தை தூண்டும் மருந்துப் பொருளாக பயன்படுவது __________

(அ) பாராசிட்டமால் (ஆ) பைதயோனால் (இ) குளோரோகுயின் **(ஈ) ஈக்வனில்**

50) பென்சிலின் என்பது எவ்வகை மருந்து ____________

**(அ) வலி நிவாரணி** (ஆ) நுண்ணுயிர் எதிரி (இ) உணர்விழிப்பு ஊக்கிகள் (ஈ) அமில நீக்கி